©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 2.40 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 198A] சென்னை, வியாழக்கிழமை, ஜூன் 29, 2017
ஆனி 15, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| சட்டமுன்வடிவுகள்:— | | |
| 25/2017 | – தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் .. .. .. | 2–4 |
| 26/2017 | – தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் .. | 5–6 |

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2017.**

**1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

1. (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டம் என்று வழங்கப் பெறும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையினால் குறித்திடலாகும் அத்தகைய தேதியில் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் X / 1937.**

**3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

2. (இதன் பின்னர் முதன்மைச் சட்டம் என குறிப்பிடும்) 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (19) ஆம் கூறில், ''அல்லது புளித்தல் இல்லாத'' என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**19 ஆம் பிரிவிற்கு பதிலாக அமைத்தல்.**

3. முதன்மைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது:-

"19. நீரா அல்லது பதனி, முதலியவை எடுப்பதற்கான உரிமம்.– மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வையின் ஆணையர் அல்லது தமிழ்நாடு பனைப்பொருட்கள் மேம்பாட்டு வாரியத்தின் செயற்பணி பதிவாளர் அல்லது இதன் பொருட்டு மாநில அரசால் அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலர் எவரும்,–

(a) புளிக்க வைக்காமல் அதனை அருந்துவதற்காக நீரா அல்லது பதனியை எடுப்பதற்காக அல்லது பனைவெல்லம், தேன், பிஸ்கட்டுகள், சர்க்கரை மற்றும் மாநில அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் பிற பொருட்களை உற்பத்தி செய்வதில், பயன்படுத்துவதற்காக நீரா அல்லது பதனி வடித்தலுக்கான உரிமங்கள் அனுமதி வழங்கலாம்; அல்லது

(b) அத்தகைய நீரா அல்லது பதனியை உடைமையில் வைத்திருத்தல், ஏற்றிச் செல்லுதல் அல்லது விற்பனைச் செய்வதற்கான அனுமதிகளை வழங்கலாம்."

**நோக்க—காரண விளக்கவுரை**

தென்னை மரங்களிலிருந்து நீராவை வடித்து இறக்கி மற்றும் பக்குவபடுத்துவதை இயல்விக்கும் பொருட்டும், நீராவை சந்தையிடுவதற்கும், ஏற்றுமதி செய்வதற்கும், வெல்லம், தேன், பிஸ்கட்டுகள், சர்க்கரை மற்றும் அத்தகைய பிற பொருட்களை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காகவும் உரிமங்கள் வழங்குவதற்கும், 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் X/1937) பொருத்தமாக திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்து இருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. தங்கமணி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

**சட்டமியற்று அதிகார ஒப்படைப்பு பற்றிய குறிப்பு**

இச்சட்ட முன்வடிவின் 3 ஆம் கூறினால் பதிலாக வைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கூறு 1(2) மற்றும் பிரிவு 19 ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்காக அறிவிக்கைகள் வழங்குவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**பி. தங்கமணி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2017.**

**2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1. (1)** இந்தச் சட்டம் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் (திருத்த) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**(2)** இது மாநில அரசால், அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2009. **2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் சட்டத்தின் 2-ஆம் பிரிவில் (e) கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:- 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(e) "மதகுரு" என்பது, தற்போதைக்குச் சொல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அல்லது பழக்கம் அல்லது வழக்காறு ஆகியவற்றிற்கேற்ப திருமணம் ஒன்றை நடத்தி வைக்கிற நபர் எவரும் என்று பொருள்படும்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 5-ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில்,- 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) "அல்லது வகுத்துரைக்கப்படலாகிறவாறான முறையில் அனுப்புதல்'' என்கின்ற சொற்றொடர் விட்டு விடப்படுதல் வேண்டும்;

(2) வரம்புரைக்குப் பதிலாக, பின்வரும் வரம்புரைகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

**வரம்புரை:–** ஆனால் திருமணம் செய்து கொண்டவர்கள் நேரடியாக விவரக் குறிப்பினை அளிக்காமல் இருக்கின்றவிடத்து, பதிவாளர் நேரடியாக விவரக் குறிப்பினை அளிக்க முடியாமல் போனதற்கான சிறப்புச் சூழ்நிலைகளை பதிவு செய்த பின்பு வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய முறையில் விவரக் குறிப்பினை அனுப்பி வைப்பதற்கு அவர்களை அனுமதிக்கலாம்:

**மேலும் வரம்புரை.-** ஆனால் மேற்சொன்ன தொண்ணூறு நாட்கள் முடிவடைந்த பின்பு வகுத்துரைக்கப்படலாகிறவாறான கூடுதல் கட்டணச் செலுத்தத்துடன் மேலுமான அறுபது நாட்களுக்குள் விவரக் குறிப்பு பதிவாளரிடம் நேரடியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படலாகிறவாறான முறையில் அளிக்கப்படலாம்.

**மேலும் வரம்புரை.-** ஆயிரம் ரூபாய் மேலுமான கட்டணச் செலுத்தத்துடன் இரண்டாம் வரம்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு விவரக் குறிப்பினை பதிவாளருக்கு நேரடியாகவோ அல்லது வகுத்துரைக்கப்படலாகிறவாறான முறையில் அளிக்கப்படலாம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 7-ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் "அளிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "வகுத்துரைக்கப்பட்ட முறையில் நேரடியாக அளிக்கப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட" என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் (a) கூறில் "அளிக்கப்படுதல் அல்லது அனுப்புதல்" என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக "வகுத்துரைக்கப்பட்ட முறையில் நேரடியாக அளிக்கப்படுதல் அல்லது அனுப்புதல்" என்கின்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 14 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**நோக்கக்—காரண விளக்கவுரை.**

தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து திருமணங்களையும் கட்டாயமாக பதிவு செய்வதற்காக 2009-ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்களை பதிவு செய்தல் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 21/2009) வகை செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின்படி திருமணம் செய்து கொண்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அல்லது மேலுமான கட்டணச் செலுத்தத்துடன் கூடுதலாக அறுபது நாட்களுக்குள் திருமணத்தைப் பதிவு செய்வதற்காக திருமண விவரக் குறிப்பு திருமணம் செய்து கொண்ட நபர்களால் அளிக்கப்பட வேண்டும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை எண் 33645/2013 என்கின்ற வழக்கில் அளித்துள்ள 09.02.2015 –ஆம் தேதியிட்ட அதனுடைய ஆணையில் கூடுதலாக கட்டணச் செலுத்தத்தின் பேரில் இந்தச் சட்டத்தில் தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ள 150 நாட்கள் காலத்திற்கு கூடுதலாக திருமணங்களைப் பதிவு செய்வதற்காக வழிமுறை ஒன்றினை செய்யுமாறு அறிவுறுத்தியிருக்கிறது. மேலும் சென்னை உயர்நீதிமன்றம் 17.10.2014 –ஆம் தேதியிட்ட HCP எண் 2767/2013 மற்றும் 2141/2014 மற்றும் HCP எண் 2767/2013ல் M.P. எண் 1/2014 என்கின்ற வழக்கில் மற்றவற்றுக்கிடையில் சிறப்பு நிகழ்வுகள் தவிர பதிவாளர் முன்பு திருமணம் செய்து கொண்ட நபர்கள் நேரடியாக வராமல் மேற்சொன்ன சட்டத்தின்படி திருமணப் பதிவு என்பது செய்யப்படுதலாகாது எனக் கூறியிருக்கிறது. நீதிப்பேராணை எண் 27552/2011 மற்றும் M.P.1/2011 என்கின்ற வழக்கில் 27.03.2015 தேதியிட்ட மேற்சொன்ன சட்டத்தின் 2-ஆம் பிரிவின் (e) கூறினை திருத்தம் செய்யுமாறு அறிவுறுத்தியிருக்கிறது. அது மதகுரு என்கின்ற சொல்லானது அனைத்து மதங்களின் நபர்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது என்பது குறித்தும் விளக்குகிறது. எனவே, அரசு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 21/2009–ஐ மேற்சொன்ன நோக்கங்களுக்காக பொருந்தத்தக்க வகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.